# பரி.பவுல் ஆலயம்,குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## நான்
## அவர்களை கர்த்தருக்குள்
## பலப்படுத்துவேன்..

சகரியா 10:12

செய்திமலர்
ஜனவரி
2024

இதழ் :09
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# பலப்படுத்துவார்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

வரும் புதிய வருடம் 2024-ம் ஆண்டின் வாக்குதத்தமாக நம் சபைக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற வசனம் நான் (இயேசு) அவர்களை (அஹமதி தமிழ் சபையை) கர்த்தருக்குள் பலப்படுத்துவேன். அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (சகரி-10:12)

ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் நம் சபையையும் நம் திருச்சபை குடும்பத்தினரையும் கர்த்தருக்குள் பலப்படுத்தி வெற்றியாய் நடத்துவார். அல்லேலூயா.

பலப்படுத்துதல் என்று சொல்லும்பொழுது அதற்கு பல்வேறு அர்த்தங்கள் உள்ளது. திடப்படுத்துதல், நிலைநிறுத்துதல், கட்டப்படுதல், மீட்டெடுத்தல், வர்த்திக்கப்பண்ணுதல், பெருகச்செய்தல், கைக்கூடி வரச்செய்தல், வாய்க்கசெய்தல், இரட்சித்தல் மற்றும் ஆசீர்வதித்தல் என்பவைகளாகும்.
மேற்சொன்ன அனைத்து காரியங்களையும் நம் சபையில் கர்த்தர் வாய்க்க செய்வார். விசுவாசத்தோடு கீழ் வரும் செய்தியை தியானத்தோடு வாசிப்போம்.

## 1. தாவீதின் சிங்காசனம் திடப்படும்...

கர்த்தர் தம்மை பலப்படுத்த வேண்டுமென்று ஆவலோடு வேண்டிக்கொண்ட தாவீதையும் அவன் ராஜ்ஜியத்தையும் அவன் கேட்டுக்கொண்டபடியே கர்த்தர் பலப்படுத்தினார். எதற்காக என்றால் இஸ்ரவேல் மக்களை சகல ஆசீர்வாதங்களோடும் நடத்த ஆண்டவர் அதிகம் ஆசைப்பட்டார். அதனால் தாவீது கேட்ட விண்ணப்பம் ஆண்டவருக்கு பிரியமாயிருந்தது. அதனால் தாவீது தன் இருதயத்திற்கு ஏற்றவன் என்று ஆண்டவர் சாட்சி கொடுத்தார். என் அன்பு சகோதர, சகோதரிகளே நீங்களும் கூட இந்த புதிய வருஷத்தில் என் குடும்பம் பலப்பட வேண்டும் என்று ஆண்டவரை நோக்கி விண்ணப்பம் செய்யும்பொழுது தாவீதின் ராஜ்ஜியத்தை பலப்படுத்தினவர், உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பலப்படுத்துவார் என்பதிலே எந்தவிதமான சந்தேகமுமில்லை.

“உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாய் இருப்பதற்கு அவர்களை திடப்படுத்தி கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்கு தேவனானீர். இப்போதும் தேவனாகிய கர்த்தாவே நீர் உமது அடியானையும், அவன் வீட்டையும் குறித்து சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த தேவரீர் சொன்னபடியே செய்தருளும்....... உம்முடைய நாமம் என்றென்றைக்கும் மகிப்படுவதாக. உமது அடியானானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக....இப்போதும் உம் அடியானின் வீடு என்றென்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதை சொன்னீர் உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானனின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக என்றான்” (2-சாமு-7:23-29)

தாவீதின் வீட்டை ஆசீர்வதித்து அவன் மன்றாட்டைக் கேட்டு நிலைப்படுத்தின கர்த்தர் உங்கள் வீட்டையும், உங்கள் வம்சத்தையும் ஆசீர்வதித்து நிலைப்படுத்துவாராக!.

## 1. தாவீதின் நெருக்கங்கள் மறைந்து போகும்...

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கைப் பாதையில் இந்த வருடத்தில் நெருக்கங்கள், போராட்டங்கள், சஞ்சலங்கள் வரலாம். ஆனால் எல்லாவற்றிலும் தேவன் நம்மோடிருந்து காரியங்கள் மாறுதலாய் முடிய உதவி செய்வார்.

“அமலேக்கியர் வந்து சிக்லாகை கொள்ளையிட்டார்கள். தாவீதும், அவனோடிருந்தவர்களும் அழுகிறதற்கு தங்களுக்கு’ பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். சகல ஜனங்களும் தங்கள் குமாரர், குமாரத்திகளின் நிமித்தம் மனக்கிலேசத்தினால் அவனை கல்லெறியவேண்டும் சொல்லிக்கொண்டார்கள். தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னை திடப்படுத்திக்கொண்டான். அப்பொழுது கர்த்தர் அபியத்தார் என்ற ஒரு தீர்க்கதரிசியை தாவீதினிடத்தில் அனுப்பினார். அவன் ஒரு ஆசாரியனாகவும் இருந்தான். அவன் சொன்னான் சகலத்தையும் நீ திருப்பிக்கொள்வாய், இழந்த நீ எல்லாவற்றையும் திருமப்பப்பெறுவாய் என்று. அவன் சொன்னபடியே தாவீது எலர்லாவற்றையும் எதிரிகளை பின்பற்றி சென்று அவர்களோடு சண்டையிட்டு வெற்றி பெற்று இழந்த எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக்கொண்டான்.” (1-சாமு-30:1-31)

என் அன்பு சகோதர, சகோதரிகளே தாவீதைப் போல மனக்கிலேசமான சமயங்களில் தேவானாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்டு உங்களை திடப்படுத்திக்கொள்ளும்பொழுது வேத வசனங்கள் மூலமாய் ஆண்டவர்

உங்களோடு பேசி ஆலோசனைகளை தந்து இழந்து போன எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக்கொள்ள ஆண்டவர் அருள் செய்வார்.

"கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக்கட்டி அதின் அடிக்காயத்தை குணமாக்கும் நாளிலே சந்திரனுடைய வெளிச்சம், சூரியனுடைய வெளிச்சத்தைப்போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப் போலவும் இருக்கும்" (ஏசா–30:26)

## 2. தாவீதின் சந்ததி பலப்படும்...

தாவீதுக்கு கர்த்தர் கீழ்க்கண்ட வாக்குத்தத்தத்தை கட்டளையிட்டார் " உன் நாட்கள் நிறைவேறி நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது நான் உனக்கு பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி அவன் ராஜ்ஜியத்தை நிலைப்படுத்துவேன் அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக்கட்டுவான். அவன் ராஜ்ஜிய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான். உன் வீடும் உன் ராஜ்ஜியமும் என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைப்பெற்றிருக்கும்" என்றார். (1–சாமு–7:11–18)

ஆம் பிரியமானவர்களே, சாலமோனைக்கொண்டு கர்த்தர் பிரமாண்டமான ஆலயத்தைக்கட்டியது போலவே உங்கள் சந்ததியின் மூலம் கர்த்தர் தம்முடைய ராஜ்ஜியத்தை இந்த உலகத்திலே ஸ்தாபிப்பார்.

பறந்து காக்கிற பட்சியைப் போல் சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாய் இருப்பார். அவர் அதைக் காத்து தப்பப்பண்ணுவார். அவர் கடந்து வந்து அதை விடுவிப்பார்."

ஆகவே தாவீதுப்போலவே நாமும் கூட ஆண்டவரிடம் சொல்லுவோம். " இப்பொழுதும் உம் அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதை சொன்னீர். உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக என்றான். (2–சாமு–7:27)

என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்று பவுல் அப்போஸ்தலன் சொன்னது போல நாமும் விசுவாசத்தோடு சொல்ல வேண்டும் (பிலி–4:13)

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து நம் சபையையும் குடும்பங்களையும் பலப்படுத்தி அவருடைய நாமத்தினாலே சிறந்த முறையிலே வழி நடத்துவாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட சதாகாலத்திலும் நிலைத்திருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமான அஹமதி தமிழத் திருச்சபை குடும்பங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நம் தேவன் வாக்குத்தத்தங்களின் தேவனாயிருக்கிறார். வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராகவும் இருக்கிறார். தேவனைப் பொறுத்தவரையில் அவர் சொல்லாமல் எதையும் செய்யமாட்டார், சொல்லிவிட்டால் அதை செய்யமால் நிற்கமாட்டார். இது தேவனுடைய இயல்பு. தேவனைக்குறித்த இந்த வெளிப்படுத்தலைப் பெற்றவர்கள் அவருடைய வாக்குத்தத்தங்களின் பேரில் உறுதியான நம்பிக்கைகொண்டு அவைகள் தங்கள் வாழ்வில் நிறைவேற்றுவதை காண்கிறார்கள். இந்த செய்தியை வாசிக்கின்ற நீங்களும் கர்த்தர் கொடுக்கிற வாக்குத்தத்தத்தைக் காண்பீர்கள். உங்களுக்காக தேவன் நினைவு படுத்திய வாக்குத்தத்தத்தின் வசனமே "தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூறு. கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.(யோவேல்–2:21)"

இவ்வாக்குத்தத்தத்திலிருந்து சில சத்தியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### 1. பயப்படாதிருங்கள் ...

தேவன் நம்மைப் பார்த்து பயப்படாதே எனக்கூறும்போது, பயப்படக்கூடாது என்ற அர்த்தத்தில் கூறுவது போல் தோன்றினாலும் நாம் பயப்படவேண்டிய அவசியம் இல்லை என மறைமுகமாக உற்சாகப்படுத்தி கூறுவதாக நான் காண்கிறேன். ஏனெனில் பயப்படாமல் இருப்பதற்காக என்ன செய்யவேண்டுமோ

அதை செய்து முடித்துவிட்டு தான் பயப்படாதே எனக் கூறுகிறார். நீங்கள் பயப்படாமல் இருப்பதற்கு அவர் என்ன செய்தார்? இக்கேள்விக்கு விடைக்கான பயத்தின் ஆரம்பப்புள்ளிக்குச் செல்லவேண்டியது அவசியமாகும். பயம் என்றால் என்னவெனறே தெரியாமல் இருந்த மனிதன் என்றைக்கு தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தானோ அன்றைக்கே பயம் அவனுக்குள் நுழைந்து விட்டது (ஆதி-3:8-10). பயத்தின் ஆணி வேர் மனிதனுடைய பாவம் என வேதம் கூறுகிறது. பயத்தின் மூல காரணமாகிய பாவத்தையும் அதன் விளைவாக மனிதனுக்குள் இருக்கும் குற்ற உணர்ச்சியையும் அவனை விட்டு நிரந்தரமாக நீங்கவே இயேசு சிலுவையில் பலியானார். இப்பொழுது இயேசுவை தங்கள் வாழ்வின் ஆண்டவராக ஏற்றுக்கொண்ட எவரும் குற்ற உணர்வோடு வாழ வேண்டிய அவசியமில்லை. கல்வாரி சிலுவையின் மூலமாக எல்லாப் பாவங்களுக்கும் பரிகாரம் செலுத்திவிட்டபடியால் இனி ஒரு போதும் நீங்கள் குற்ற உணர்விலோ அதன் நேரடி விளைவான பயத்திலோ வாழ வேண்டிய அவசியமே இல்லை. இந்த அர்த்தத்தில் தான் "பயப்படாதே" எனக் கூறுகிறார். நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆகவே பயப்படாதிருங்கள்.

## 2. மகிழ்ந்து களிகூறுங்கள்...

தேசமே பயப்படாதே எனக் கூறியவர் மகிழ்ந்து களிகூரு எனவும் கூறியிருக்கிறார். மகிழ்ந்து களிகூரு என்ற வார்த்தை உன்னால் இனி மகிழ்ந்து களிகூற முடியும் என்ற அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது. நீ நினைத்தால், விசுவாசித்தால் உன்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும். இப்புதிய ஆண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்வின் ஆண்டாக இருப்பதாக.

என்னால் மகிழ்ச்சியாக வாழ முடியவில்லையே எனக் கூறுகின்ற நீங்கள் இப்புதிய ஆண்டில் மகிழ்ந்து களி கூறுகிறவர்களாக இருப்பீர்கள். ஏனெனில் நீங்கள் பயப்படாமல் இருப்பதற்கு பாவத்தை உங்களை விட்டு அகற்றியவர், மகிழ்ந்து களிகூறுவதற்காக இரட்சிப்பை உங்களுக்கு அருளியிருக்கிறார். இந்த இரட்சிப்பினால் உண்டாகிற சந்தோஷமே நிரந்தர நித்திய சந்தோஷமாகும். இப்புதிய ஆண்டில் உங்கள் இரட்சிப்பை நினைத்து கர்த்தருக்குள் ஒரு முறையாகிலும் சந்தோஷப்படுங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் இருதயம் இரட்சண்ய சந்தோஷத்தால் நிரம்பியிருக்கும்.

## 3. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்...

கர்த்தர் பெரியவர். அவர் பெரிய காரியங்களைத்தான் செய்வார். இப்புதிய ஆண்டில் அவர் செய்கிற பெரிய காரியங்களை உங்கள் வாழ்வில் அனுபவிப்பீர்கள். யோவா-2:22-ம் வசனத்திலிருந்து கீழே வாசித்துப்பாருங்கள், எதுவுமே இல்லாத பாலைவனமாக உள்ள உங்கள் வாழ்வை பூத்துக்குலுங்கும் கனி விருட்சங்களால் நிறைந்த சோலைவனமாக மாற்றுவார் விசுவாசியுங்கள். காலங்கள் கடந்து போய்விட்டதே, வருஷங்கள்

உருண்டோடிவிட்டதே, இன்னும் எதுவுமே கிடைக்கவில்லையே என அங்கலாய்க்கும் ஆத்துமாவே உன்னைப் பார்த்து கர்த்தர் சொல்லுகிறார். வெறுமையாய் எந்த ஆசீர்வாதமுமின்றி அழிந்து போன வெட்டுக்கிளிகள் பட்சித்துப் போட்ட வருஷங்களையும் அதன் பலனையும் திரும்ப அளிப்பேன் எனக் கூறுகிறார்.

குறைவை மட்டுமே வாழ்வில் அனுபவித்தவர்கள் நிறைவையும், பரிபூரணத்தையும் காண்பீர்கள். பிசாசின் தீமைகள் நிறைந்த உலகில் தேவனுடைய நன்மைகளால் திருப்தியாவீர்கள். நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. மட்டுமல்ல உங்கள் வாழ்விலும், குடும்பங்களிலும், சபையிலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதைக் காண்பீர்கள். உங்கள் மூலமாக ஆவியின் வரங்கள் வெளிப்பட்டு அநேகருக்கு ஆசீர்வாதமாக இருப்பீர்கள்.

கர்த்தர் தாமே உங்கள் ஆசீர்வதிப்பாராக.

L.ஜெபராஜ்

## சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகளையும், ஸ்தோத்திரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.
கர்த்தரின் பெரிதான கிருபையினால் கடந்த ஆண்டை முடித்து புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கும்படியான கிருபைகளை நமக்கு தந்ததற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.
இந்த இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது நாம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நேராக கடந்து செல்லலாம்.

**"காலம் நிறைவேறிற்று தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாயிற்று மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு-1:15)**

நாம் இப்பொழுது கிருபையின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய தேவன் திட்டமும், தெளிவுமாக கடைசி காலத்தில் என்னவெல்லாம் நடக்கப்போகிறது என்பதையும், எப்படி இருக்கும் என்பதையும் குறித்து வேதாகமத்தின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அதைக்குறித்து நாம் இப்போது தியானிப்போம். நமக்கு இரண்டு பிரமாணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1.நியாயப்பிரமாணம் 2.கிருபையின் பிரமாணம்.

1. நியாயப்பிரமாணம் என்பது தண்டனையின் காலம் இதைக்குறித்து தானியேல்-9:27-ல் கூறப்பட்டிருக்கிறது (அதாவது கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்பது)
2. கிருபையின் பிரமாணம் என்பது மன்னிப்பின் காலம், இதைக்குறித்து 1-யோவான் 1:7-ல் (இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்) என்பதே.

தண்டனையும், மன்னிப்பும் ஒரே நேரத்தில் செயல்படமுடியாது. முதலில் நியாயப்பிரமாணம் தொடங்கும் அது முடிந்த பிறகுதான் கிருபையின் காலம் தொடங்கும். கிருபையின் காலம் முடிந்த பிறகுதான் உபத்திரவகாலம் தொடங்கும்.ஆனால் சபை இந்த உபத்திரவ காலத்திற்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படும். அதற்கு பின்பு 7 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி நடக்கும். அப்பொழுது உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ மதத்தார் அனைவரும் கிறிஸ்துவுக்கு எதிராக எழும்புவார்கள். அனேக சபைகள் ஆவிக்குரிய சபைகளில்தான் பிரச்சனை எங்கள் சபைகளில் இல்லையென்று சொல்லுவார்கள்.

இதற்கு பின்பு யூதர்களுக்கு விரோதமாக ஒரு பிரச்சனைகள் எழும்பும் அப்போது 7 வருட உபத்திரவ காலம் நடக்கும். இது முடியும் போது அர்மகெதோன் யுத்தம் நடக்கும். அப்போது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருவார். அவர் வந்து 1000 வருட அரசாட்சி இந்த பூமியில் செய்வார். அது எப்படி இருக்கும் என்றால் ஆதாம் காலத்தில் இருந்தது போல பாவமில்லாத அரசாட்சி நடக்கும். அப்பொழுது புதிய பூமி, புதிய வானம், புதிய சூரியன்,சந்திரன் என இப்படியெல்லாம் புதியதாகும்.

இந்த 1000 வருட அரசாட்சி முடியும் வரை சாத்தான் கட்டப்பட்டு பாதாளத்தில் இருப்பான். 1000 வருட அரசாட்சி முடிந்த பிறகு கட்டவிழ்க்கப்படுவான். அதற்கு பின்புதான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அங்கு வெள்ளை சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கும், அப்பொழுது நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படும். அப்போது யாரெல்லாம் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்வார்கள் என்றால் அந்த 7 ஆண்டுகள் உபத்திரவப்பட்டு அதில் யாரெல்லாம் கர்த்தருக்காக காத்திருந்து, கர்த்தருக்குள் நிலைத்திருந்து, அவரை விசுவாசித்து விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

வெகுசீக்கிரத்தில் சபை எடுத்துக்கொள்ளப்படபோகிறது. மறுரூபம் ஆகப்போகிறது.
லூக்-21:28-ன்படி " இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" என்று கர்த்தர் சொன்ன இந்த வசனத்தின்படி நாம் நம்முடைய விசுவாசத்தை காத்துக்கொண்டு, அவருடைய வார்த்தை என்னும் வசனத்தின்படி நடந்து, அவரில் நிலைத்திருந்து நாட்களை பிரயோஜனப்படுத்திக்கொள்வோம். இனி நாட்கள் செல்லாது. அவருடைய வருகையில் அவரோடு எடுத்துக்கொள்ளும்படியாக ஆயத்தமாவோம்.
கர்த்தரின் பணியில்,

உங்கள் அன்பு சகோதரி,
செலின் டேவிட்

# வசந்தமான பாலைவனம்

கடந்த காலங்கள்
கண்ணீர் பாதைகள்
எதிர்பார்த்த ஏக்கங்கள்
கனவாக கலைந்தாலும்
இன்னும் நம்புகிறேன்–நீர்
இருப்பவராக இருக்கிறேன் என்றதால்
பாலைவனம் என்றாலும்
பாதைகாட்ட நீர் உண்டு
பாவி நான் என்றாலும்
பாசம்காட்ட நீர் உண்டு
பாடுகளும் நிம்மதியே–என்
பக்கம் நீர் இருப்பதால்
வருங்காலம் என் வசமே
வசந்தமாகும் இந்த பாலைவனம்
புது கிருபையால் நிரப்பிவிடும்
வரும் புத்தாண்டு– 2024

Happy New Year To All-2024

உங்கள் அன்பு சகோதரி,
வனிதா

# தெரிந்து கொள்வோம்

1. ஐ நா பொதுச்சபையில் முதல் பெண் தலைவர் விஜயலஷ்மி பண்டிட் ( இந்தியா )
2. விண்வெளியில் அதிக நாட்கள் தங்கி இருந்த முதல் பெண் , சுனிதா வில்லியம்ஸ் (இந்தியா)
3. (195 நாட்கள்) ஐந்து கண்டங்களில் நீந்திய முதல்பெண் பியூலா சௌத்திரி (இந்தியா)
4. ஜிப்ரால்டர் ஜல சந்தியை நீந்தி கடந்த முதல் பெண் ஆர்த்தி பிரதான் குப்தா (இந்தியா)
5. உலகின் முதல் பெண் ரயில் பெண் ஓட்டுநர் சுரேகா யாதவ் (இந்தியா)

" உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் "
( ஆதி –12:2 )

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோதரி. ஜெனிஷா ஜான் கெஸ்டன்
செல்வன்.மிகாயேல் சத்தீஷ்
சகோ.ஜெகன்
செல்வன்.ஆல்வின் டேவிட் மணிராஜ்
செல்வி.ஷாரோன் ஜெனிபர் வின்செண்ட் ஸ்வீட்
சகோ.யேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ.சகாய டார்வின்
செல்வன்.ஜெய்ரஸ் பால்
சகோ. R.நக்கீரன்
சகோதரி.நவீதா பால் ராஜசேகரன்
சகோதரி.ஆஷாதேவி பிரெட்சிலின்
செல்வன்.ஜோஷன் ஜீவா ஜீவல்சிங்
சகோதரி.ஜென்னட் யேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோதரி.பிரின்சி கமலதாஸன்

சகோ.சுபின் சிங்
சகோதரி.சுனிதா சுந்தரராஜ்
செல்வன் ஜான் லெவின் ஜான் கெஸ்டன்
சகோ.ஆரோக்கியராஜ்
சகோ.ராஜ்
சகோ.செங்குட்டுவன்
சகோதரி.ஜோன் ஆர்க் அசோக்குமார்
சகோதரி.மஞ்சுளா பாலமுருகன்
செல்வி.ஷெரின் பெனிட்டா ஸ்டாலின்
சகோதரி.விக்டோரியா ராஜன்
செல்வி.சாரா ஆல்வின்
செல்வன்.சாமுவேல் ஆல்வின்
செல்வி.mf;rhs; நிசி எபெனேசர்
சகோதரி.எப்சிபா ஸ்டீபன் ஜெயக்குமார்
சகோதரி.அபிகாயில் கிரேஸ் ஜஸ்டின்
சகோதரி.பிரிசில்லா செங்குட்டுவன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் (கர்த்தர்)
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திரு–திருமதி சுகந்தி தம்புகுமார்
திருமதி–திரு சாம் ஆனந்
திருமதி–திரு சகாய டார்வின்
திருமதி–திரு E.சாமுவேல்
திருமதி–திரு.மணிராஜ்
திருமதி–திரு.வின்செண்ட் ஸ்வீட்

திருமதி–திரு.ஷர்மன் ராஜ்
திருமதி–திரு இயேசுரத்தினம்
திருமதி–திரு. தினேஷ் குமார்
திருமதி–திரு கனீஷ் ஜோஸ்வா அமலன்
திருமதி–திரு பால் ராஜேஷ்
திருமதி–திரு வேளாங்கன்னி

# 2024 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/1/2024 | சகோ.சுதாகர் | சகோ.சுகுமார் |
| 14/1/2024 | சகோ. பிரசாத் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |
| 21/1/2024 | சகோ.சுகுமார் | சகோ.அருண்இம்மானுவேல் |
| 28/1/2024 | சகோ.சுபின் சிங் | சகோ.ஸ்டாலின் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/1 /2024 | சகோ.ஆரோக்கியராஜ் | சகோ.சுகுமார் |
| 12/1 /2024 | சகோ.M.கிறிஸ்டோபர் | சகோ.ஆண்டனி |
| 19/1 /2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/1 /2024 | சகோ. ஏசுரத்தினம் | சகோ.ஆசீர்வாதம் |

**11/1/2024 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**இந்த மாதத்தின் சகோதரிகள் ஐக்கிய கூடுகை பாஹீலில் உள்ள ஜெப வீட்டில் வைத்து நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கபடும்**

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – மத்தேயு

**26/1/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் - மாலை 6:30 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி - 1 நாளாகமம்

# 2024 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1. இளைஞருக்கும் மூப்பருக்கும் பேதுரு கூறும் அறிவுரை என்ன?
2. அவபக்தியுள்ள பாவிகளின் நிமித்தம் யார் வருகிறார்?
3. எதெல்லாம் பாவம்? எவைகளுக்கு விலகி நம்மை காத்துக் கொள்ள வேண்டும்
4. நாம் பிதாவாக தொழுது கொண்டு வருகிறவர் எப்படிபட்டவர்?
5. நம்மை நாம் எப்படி வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறோம்? ஆதனால் என்ன நமக்குள் இராது?
6. தீமை, உதாசீனம் செய்கிறவர்களை நாம் ஏன் ஆசீர்வதிக்க வேண்டும்?
7. நற்சாட்சி பெற்றவன் யார்?
8. மரணத்திலே நிலை கொண்டிருப்பவன் யார்?
9. யார் தேவனை காணவில்லை?
10. தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று சொல்லி, தன் சகோதரனை பகைக்கிறவன் யார்?
11. கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களுக்கும், அக்கிரமகாரருக்கும், என்ன வைத்திருக்கிறார்?
12. நாம் அவருடைய(தேவனுடைய) கட்டளையின்படி நடப்பதே............?
13. திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களுக்கு என்ன நேரிடுகிறது?
14. விசுவாசத்தின் பலன் என்ன?
15. இருளிலே இருக்கிறவன் யார்?

**விடைகளை வருகின்ற 20-01-2024க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்– I பேதுரு, II பேதுரு, I யோவான், II யோவான், III யோவான், யூதா அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2023 - டிசம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. சூரியன் - சந்திரன் யோசு. 10:13
2. தென்நாடு - வடநாடு யோசு. 17:10
3. ஆத்துமாக்களைக் குறித்து யோசு. 23:11
4. இரவும் பகலும் தியானிக்க வேண்டும். யோசு. 1:8
5. காலேபை ஆசீர்வதித்து - எபிரோனை யோசு. 14:13
6. இஸ்ரவேல் புத்திரருக்கு - கற்கள் யோசு. 4:7
7. இஸ்ரவேல் புத்திரருக்கு யோசு. 10:21
8. யோசுவா யோசு. 24:30
9. எரிகோவுக்கு கீழெல்லையான கில்காலிலே யோசு. 4:19
10. மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதை யோசு. 23:6
11. கில்கால் யோசு. 5:9
12. கர்த்தரே தேவன் என்பதற்கு அந்தப் பீடம் நமக்குள்ளே சாட்சி யோசு. 22:34
13. சகல வெள்ளியும், பொன்னும், வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள். யோசு. 6:19
14. பலிபீடம் - ஏபால் பர்வதத்தில் யோசு. 8:30
15. விருத்தசேதனம் பண்ணப்பட்ட ஜனங்கள் யோசு. 5:8

## 2023- டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. ஜீனா சதீஸ்குமார்
SIS. சாந்தி
SIS. நித்யா ஜோன்ஸ்
BRO. எட்வின் சாம் ஞானதுரை

## வாலிபர் பகுதி

சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு.( ஏசா 40:9)

புதுத்திருப்புதல் :

சீயோனே நற்செய்தி தருபவனே, உயர் மலைமேல் நின்றுகொள் எருசலமே நற்செய்தி உரைப்பவனே, உன் குரலை எழுப்பு, அஞ்சாதே, இதோ,உன் கடவுள் என்று யூதர்நகர்களிடம் முழங்கு"

முன்னுரை

சபையை குறித்து சத்தியவேதம் சீயோன் என்றும், பரம எருசலேம் என்றும் சொல்வதைக் காண்கிறோம், சுவிசேஷகியே என்று ஆண்டவர் அன்போடு அழைப்பதினால் நற்செய்திப் பணியே நம் தலையாய பணி என்ற எதிர்பார்ப்பை அறிகிறோம். உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவியுங்கள்" என்றுதானே நம் கடவுளும் கட்டளை கொடுத்திருக்கிறார்.

சரித்திரம்:

கிமு எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எருசலேமில் வாழ்ந்து ஏசாயா தீர்க்கன் கர்த்தரரால் தெரிந்துகொள்ளபட்டு கற்பிக்கப்பட்டு யூத மக்களிடம் அனுப்பட்டார்.

தென்நாடாம் யூதா அண்டை நாடான அசீரியாவின் பயமுறுத்தலுக்கு ஆளாகிறது யுத்தம் தொடுப்போம் என்று அச்சுறுத்துகிறது.

அசீரியா வலுமிகுந்த நாடுதான் ஆனால் ஆன்மீக வலுகிடையாது.

யூத மக்கள் தங்கள் ஆன்மீக ஆயுதத்தை கீழே போட்டுவிட்டு கடவுள் பயமற்றவர்கள் ஆனார்கள். பாவகுட்டடையில் முழ்கி கிடந்தார்கள் அதுவே அவர்களின் பெரும் பலவீனம்.

விழித்தெழுங்கள் வீறுகொண்டெழுங்கள் யூதாவைக் கட்டுங்கள் என்று முழ்ங்குகிறார் ஏசாயா நீங்கள் அந்த முழக்கத்துனூடே இயேசுவை முன்னறிவிக்கிறார்.

ஏசா 60:1,2 1. எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.2. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.

இயேசு இரட்சகனின் பிறப்பை இங்கு தெளிவாகக் கூறுகிறார், ஏசா 53:5 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்..

என்னுரை:

விவிலியம் ஒரு வினோதமான நூல் அதனை விநோதமாகவே நான் படிப்பது வழக்கம்.

நீதிமொழிகள் 31 அதிகாரங்கள் 31 நாட்களுக்கு அதிகமாக ஒரு மாதமும் கிடையாது, அப்படியானால் நாம் தினம் ஒரு அதிகாரம் படிக்க ஆண்டவர் விரும்புகிறார். எட்டாம் தேதி என்றால் எட்டாம் அதிகாரம் இப்படியே வருடம் முழுவதும் 150 சங்கீதங்கள் உண்டு தினம் 5 சங்கீதங்கள் படித்தால் ஒரு மாதத்தில் முடித்துவிடலாம்.

ஏசாயா தீர்க்கதரிசிகள் புத்தகம் இன்னும் விந்தையானது. ஏசாவில் 66 அதிகாரங்கள் உள்ளன. பைபிளில் 39ூ27ளு66 நூற்கள் உள்ளன. அறுபத்தாறு நூற்களையும் உள்ளடங்கியது ஏசாயாவின் அறுபத்தாறு அதிகாரங்கள்.

எனவேதான் "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்"(யோவா 5:39)என்று ஆண்டவர் தூண்டுகிறார் என்னை குறித்து சாட்சி கொடுக்கிறவர்களும் அவைகளே என்று கூறுகிறார்.

பின்னுரை:

நம் நற்செய்தியின் தளங்கள் எங்கே?

"சீயோன் என்னும் சமவெளி, உயர்ந்த பர்வதம் என்னும் மலைப்பகுதி எருசலேம் போன்ற பட்டணங்கள்"(ஏசாயா 40-9)

நாட்டுபுற ஊழியம், மலைபுற ஊழியம், நகர்புற ஊழியம், என்று உலகம் முழவதும் சுவிசேஷம் அறிவிக்கபட வேண்டும் என்று ஏசாயா விரும்புகிறார்.

நற்செய்திப்பணியை எப்படி செய்வது?

1. உரத்த சத்தமிட்டு கூப்பிடு:- (ஏசா 40:9)

இப்பொழுதெல்லாம் நாம் தெருதெருவாக நற்செய்தி அறிவிக்கசெல்லும் போது மக்கள் கூடிவருவதில்லை தங்கள் தங்கள் வீடுகளிலேயே அமர்ந்துள்ளார்கள். அப்படியானால் ஒலிபெருக்கி மூலமோ, வாய் மூலமோ உரக்க சத்தமிட்டுக் கூப்பிடுவது நம் கடமையாகவே உள்ளது.

2. பயப்படாமல் சத்தமிட்டு கூப்பிடு :-

கொழும்பு பட்டினத்தில் இன்வெறிபிடித்த ஒரு கும்பல் வீடுகளை வேட்டையாடியது பெற்றோர் வேலைக்கு போயிருந்த வீட்டில் ஒரு வாலிப பெண் மட்டும் இருந்தாள், அவள் பயந்து நடுங்கினாள், வெறியர்கள் அவள் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டார்கள்.

பயப்படாமல் சத்தமிட்டு கூப்பிடு" என்று அவளுக்கு ஒரு சத்தம் கேட்டது, அவள் சத்தமிட்டு ஜெபித்தாள் அந்த ஜெபம். ஏதோ புரியாத மொழியாக அவர்கள் காதில் விழவே இவள் நம் எதிரி அல்ல என்று சொல்லி கடந்து சென்று விட்டார்கள்.

3. இதோ உன் தேவன் என்று சத்தமிட்டு கூப்பிடு:-

நம் தேவாதிதேவனாகிய இயேசுவை குறிப்பிட்டு சொல்ல வேண்டும். ஒரு இந்து பணிப்பெண் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாள் அன்று குடும்ப

 ஜெபத்தில் முதல் முறையாக ஜெபித்தாள் இயேசுவே இயேசுவே என்று பலமுறை சொன்னாள் ஜெபம் முடிந்தபிறகு எல்லலோரும் சிரித்தார்கள், அதற்கு அவள் சொன்னாள் ஜெபம் எனக்கு புதியதல்ல இயேசு என்ற சொல்தான் எனக்கு புதிது என்றாள்.

இலவசமாய் பெற்றுக்கொண்ட நன்மைகளை இலவசமாய் கொடுங்கள்.


வாலிபம் இயேசுவுக்கே.

## புதியவை தொடங்கட்டும்...


பழையவை மறையட்டும்
புதியவை தொடங்கட்டும்
கவலை மறையட்டும்
புன்னகை பூக்கட்டும்
தோல்விகள் மறையட்டும்
வெற்றிகள் பெருகட்டும்
புதிதாய் பிறந்ததால்
உள்ளம் நினைக்க
பூக்களின் வசமாய்
நம்பக்கை தெரிக்க
நல்தொரு நாளாய் தினமும் விடிய
தடை கற்களை அகற்றி
பாதைகளை சீர்படுத்தி
பனிபோல துன்பங்களை விலக்கி
உன்னை கரை சேர்க்கும்
கலங்கரை விளக்காய் இயேசு இருக்க
வாழ்க்கையை கொண்டாடுங்கள்
புதிய துவக்கத்தை வரவேற்றுங்கள்
தொடங்கினவர் முடிப்பார் என்றும்
இயேசு சொன்னதை நிறைவேற்றுவார்
எல்லோருக்கும் இனிய சிறந்த
துவக்கமாக இருக்கட்டும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உங்கள் அன்பு சகோதரன்
ஆண்டனி


# Kids Corner




Jeevan Ashva




Deril Godson




Jeevan Ashva

## என் துணையும் மீட்புமானவர்

என் துணையும் மீட்புமானீர்
என் கோட்டையும் நீர்தானே
உம்மை நான் நம்பியிருக்கிறேன்
உம் அன்பை நான் நம்பியிருக்கிறேன்
உம் வசனம் உம் கிருபை
என்றென்றும் நிலைத்திருக்கும்
உம்மில் நான் வளர்ந்திட
கிருபை தாரும்
உம்மால் எல்லாம் ஆகும்–என் இயேசுவே
என்றென்றும் உம்மால் ஆகும்
இந்த உலகத்தில் ஒரு நாமம்
அது இயேசுவின் நாமமே
வானிலும் பூவிலும் மேலானதே
உம் நாமம் மேலானதே – என் இயேசுவே
மேலான நாமம் நீரே

Rayan Sathishkumar

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Happy New Year

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

2024

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only